தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. VI.—No. 7.] MADRAS:—SUNDAY FEBRUARY, 13, 287. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

மானுஷீகத்துவம்.	சாதி சமய வாத விபரீதம்.
மின்னலால்விளையும் மரணம்.	வர்த்தமானசங்கிரகம்.
கள்ள ஆஸ்திகம்.	நோட்டீசு.

"இந்துசுவக்கியானசங்கம்" என்னும்பெயர், இச்சங்கத்தில் இப்போது யூரோஷியர் முதலானவர்கள் சேர்ந்திருப்பதால், "மதிராஸ் சிக்யுலர் சோசைட்டி" என்னும் இங்கிலீஷ் பெயருக்கிணங்க, "சென்னை லௌகிக சங்கம்" என மாற்றப்பட்டது.

மானுஷீகத்துவம்.

நாம் இவ்வுலகத்தின்கண் காணுஞ் சகல பதார்த்தங்களையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டு (ஒத்தவை இவை ஒவ்வாதவை இவை நன்மையைத் தருபவை இவை தீமையைத் தருபவை இவை என்று) பகுத்தறியும் அறிவே நமது ஞானத்திற்குக் காரணமாக விருக்கின்றது. பகுத்தறிவையன்றி ஞானமுங், *காட்சியையன்றி பகுத்தறிவும் இல்லையாதலால், ஞானத்திற்கு மூலகாரணம் காட்சியேயாம். காட்சி மனக்காட்சியென்றும் இந்திரியக்காட்சியென்றும் இருவகைப்படு மென்பது சிலர் துணிபு. கண்ட வழியுங் கேட்டவழியும் முகர்ந்த வழியும் உருசித்தவழியும் பரிசித்தவழியுமே நமது மனம் செல்கின்றமையால், மனத்திற்கும் இந்திரியங்களுக்கும் தொந்தமுண்டு, மனோரதத்தோடு தொடுக்கப்பட்டுள்ள சத்தம் ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் பஞ்சேந்திரியப்புரவிகள் சென்றாலல்லது மனோரதம் செல்லாதாதலால், மனம் இந்திரிய வழிப்பட்டதென்பதே துணிபு; ஆயினமையின மனக்காட்சி இந்திரியக்காட்சியினுள் அடங்கும்; அடங்கவே மனக்காட்சியும் இந்திரியக்காட்சியும் ஒன்றேயாகின்றது. ஆனதோர்காரணத்தால் ஞானத்திற்கு ஆதிகாரணம் இந்திரியமே: இந்திரியங்கட்கு வசப்பட்டதெல்லாம் சத்தியம்; இந்திரியங்கட்கு வசப்படாததெல்லாம் சத்தியமெனச்சொல்லோம். இந்திரிய விஷயமாகிய கானல்நீர் இப்பிவெள்ளி என்பன அசத்தியமாய் விடுகின்றமையால், எங்ஙனம் சத்தியமாதல்கூடும் எனின், நீர் ரூபம் பரிசம் ரசம் முதலிய குணங்களுடையதாதலால், ரூபமாத்திரம் விஷயப்பட்டு மற்றைய குணங்கள் விஷயப்படாமையால் அது இந்திரியவிஷயமன்று; விகற்பக்காட்சியேயாம். இந்திரியங்களுக்கு விஷயமாகாததை உண்டென்றும், விஷயமானதை இல்லையென்றும் சொல்லுதல் அசத்தியமே. அசத்தியம்பேசுதல் மானுஷீகத்திற்கு ஒத்ததன்று. ஒருவர் தமது அறிவுக்கெட்டாத ஒன்றை மனோசிருஷ்டிசெய்து நமக்குச்சொல்லின், அதைச்சொல்லளவாகக் கொள்ளாமல், கானல்நீரை அதனது குணங்களைக்கொண்டு பரீக்ஷித்ததுபோல பரீக்ஷித்து இந்திரியவிஷயமாகுமேல் கொள்ளுவதும், இந்திரியவிஷயமாகாதேல் தள்ளுவதுமே மானுஷீகத்துவம். மனமாகிய பொக்கிஷத்தில், மதவைராக்கியக் கள்ளன் புகுந்து, நியாயமாகிய நன்மணிகளைக் கொள்ளைகொண்டோடாமல், நல்லறிவாகிய தாழ்வீழ்க்கதிக்காப்பிட்டு, விவேகமாகிய காவல்வைத்துக்காப்பதே மானுஷீகத்துவம். பொய்க்குப் பயப்படுதலும், அசத்தியத்திற் கஞ்சுதலும், பொருமைக்குப் புறங்காட்டுதலும், வசையை வழிமறித்தலும், நியாயத்தை நேசித்தலுமே மானுஷீக ஒழுக்கம்! நிலத்தின்கண்ணேனும் நீரின் கண்ணேனும் யாத்திரைபுரியும் மனிதர் இடுக்கத்தினின்று தெய்வபக்தியால் உய்ந்தாரென்றும், அஃதின்மையால் மாய்ந்தாரென்றும் சொல்வது நியாயமன்று. தெய்வபக்தியுடையவர்களெல்லாம் நேர்ந்த இடுக்கண் பலவற்றினின்றும் எப்போதும் உய்கின்றாருமில்லை; தெய்வபக்தி இல்லாதவர்களெல்லாம் நேர்ந்த இடுக்கண் பலவற்றினின்றும் எப்போதும் மாய்கின்றாருமில்லை. வலுவாய் சமைக்கப்பட்டுதொழில்வல்ல தந்திரியாகிய மாலுமியால் செலுத்தப்பட்ட புதிய மரக்கலத்திலேறிப் புயலில்லாக் காலங்களில் போக்குவரவு செய்யும் பக்தியற்றோரெல்லாம் துன்பத்திற்குள்ளாவதும், புயல்பெருகிய காலத்தில் தொழிலறியாத துட்டமாலுமியால் செலுத்தப்பட்டபழைய கப்பலிலேறிப் போக்குவரவுசெய்யும் பக்திமான்களெல்லாம் துன்பமுறாதொழிவதும் இல்லை. பக்தியற்றோரெல்லாம் வறியவருமல்லர். பக்தியுற்றோரெல்லாம் செல்வத்திற்பெரியவருமல்லர். பக்தியுற்றோர்க்கு வருவதெல்லாம் இன்பமேயன்று; பக்தியற்றோர்க்கு வருவதெல்லாம் துன்பமேயன்று. பக்தியுடையோரெல்லாம் பலநாள் வாழ்வதும் இல்லை; பக்தியில்லாரெல்லாம் சிலநாளிற்றாழ்வதும் இல்லை. பக்தியற்றோரெல்லாம் சோரரும் அன்று; பக்தியுற்றோரெல்லாம் யோக்கியருமன்று. நோய்முதலிய துன்பம்வந்தபோது பக்தியால் பிரார்த்தனை செய்பவரெல்லாம் பிழைப்பதும் இல்லை; பக்தி இன்மையால் பிரார்த்தனை செய்யாரெல்லாம் மாய்வதும் இல்லை. ஆயினமையின் குணமுடையவைகளைக் கைவிடாமலும், இன்பத்தைத் தருமவைகளை இகழாமலும், ஆரோக்கியத்தை அசட்டைசெய்யாமலும், பசித்தோர்க்குஅன்னமிட்டும், சரணடைந்தோர்க்குப் புகலிடந்தந்தும் வருதலே, மானுஷீகமதம். மனோவாக்குக் காயங்களென்னும் கரணத்திரயங்களுக்கும் எட்டாத ஒன்றை, மலடிமகன் முயற்கொம்பேறி ஆகாயப்பூவை அருந்துணைவிக்குச்சூட்டி அழகுபார்க்கும் அற்புதச்செய்கையொத்ததிழலை அளப்பதுபோல அளப்பான் புகுதல்அழகன்று. கல்வியைக் கவனிக்காமலும் நீதியை நிலைநிறுத்தாமலும், விவேகத்தை விர்த்திசெய்யாமலும் நாள் பலகழிக்கும் நஞ்சனையார் செய்கை நன் மானுஷீகமன்று. பகுத்தறிவென்பது மனிதருக்கிருந்தும் தக்கவை தகாதவை ஒத்தவை ஒவ்வாதவை என்னும் இருகக்ஷியையும் சித்த சமாதானத்தோடு முற்றுமுணர்ந்து உபேக்ஷிக்க வேண்டுவனவற்றை உபேக்ஷிக்காமலும், அபேக்ஷிக்க வேண்டுவனவற்றை அபேக்ஷிக்காமலும், எது எப்படிபோனால் நமக்கென்ன, கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன், உண்பதும் உறங்குவதுமே நமது கடனெனககருதி, விவேக விர்த்தியாகும் பத்திரிகைகளையும், சாஸ்திரங்களையும், கேள்விகளையும் கேட்டலிலும் படித்தலிலுங் காலத்தைப்போக்காமல், சதாகாலமும் கும்பிக்கேயுழைத்து வாணாளை வீணாட்படுத்தி, சஞ்சலமேலிட்டிளைத்து நாளும் வருந்தியுளைத்து நரைமயிருடன் கூனும் வளைந்து விக்கலு மிருமலு மெழ ஒக்கலுஞ் சுற்றமு மழ பாடையேறி காடடைவது பண்புடைத்தாகிய மானுஷீகமன்றே! மிருகாதிகளும் உண்டுறங்குகின்றனவன்றோ? மனிதனுக்குள்ள ஏற்றந்தான் என்னையோ! சகல விஷயங்களையும் கற்றுங்கேட்டும் உணர்ந்தும் சுகாதாரமானவைகளைக் கைக்கொண்டும், துன்பத்திற்கேதுவாகியும் நிஷ்பிரயோசனமாகியு முள்ளவைகளைக்கைவிட்டும் மனுஷாரோக்கியத்தைக் சதாகாலமும் ஓம்பி அபிவிர்த்திசெய்தலே மானுஷீகத்துவமாதலால், இவற்றைநாம் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தொழுகுதல் கடனாகும்.

* ஐயக்காட்சி, வெதிரேகக்காட்சி, திரிபுக்காட்சி, என்றும் சிலர் சொல்வர்; அவைஇந்திரியக்காட்சியினுள் அடங்கும்.

—0—

மின்னலால்விளையும் மரணம்.

ஒருவன் மற்றொருவனைக் கையினாலாவது ஊசியினாலாவது குத்தினால் குத்தின அக்கணமே அதை யுணர்கின்றானெனச் சாதாரணமாய் ஜனங்களபிப்பிராயப்படுகிறார்கள். இஃது முற்றும் பிசகு. உணர்ச்சி அறிவிற்கு, மூளை மாதுருஸ்தானமாதலால் குத்தியசெய்கை நரம்பின்வழியாய்ச்சென்று மூளையைத் தூண்டவேண்டும். இவ்விதமாய் மூளையைத் தூண்டுவதற்கு அவசியம் காலவரை வேண்டும். மூளைக்குத் தூரத்திலிருக்கும் தேகவுறுப்பிலுண்டாக்கிய காயத்தைப்பார்க்கிலும் அதற்குச் சமீபவுறுப்பிலுண்டாக்கிய காயம் சீக்கிரமாய்ச்சென்று அம்மூளையைத் தூண்டும், ஏனெனில் பரிசஉணர்ச்சியின் வேகத்துவம்

ஒரு விநாடிக்கு நூறடி (100ft) என்றும் அதாவது ஆகாயத்தோடு கலந்திருக்கும் ஓசை (சப்தம்) யின் வேகத்துவத்தின் பத்திலொரு பங்கைப்பார்க்கினும் (1/10) குறைந்திருக்கின்றதென ஹெம்ஹோள்ட்சு (Helmholtz) என்னும் பண்டிதர் அதிநுட்ப பரிட்சைசெய்து கணக்கிட்டிருக்கின்றனர். (50ft) ஐம்பதடி நீளமுள்ள திமிங்கலமீனின் வாலில் ஓர்காயம் உண்டாக்கினால் அரைவிநாடிக்குப் பிறகுதான் அக்காயம் அம்மீனின் மூளையைத் தூண்ட வாரம்பிக்கும். இப்படித் தூண்ட வாரம்பிப்பதற்குத் தேவையான அரைவிநாடியுடன்கூட மூளையினுணர்ச்சி நரம்புகள் சுய நிலையிலிருந்து அக்காயத்தையுணர்த்த ஓர் விநாடியில் (1/10) பத்திலொருபங்கு காலந்தேவையாயிருக்கிறது. ஆதலால் இத்திமிங்கலத்தை இக்காயத்தினின்றுந்தடுக்க கருதினால் அதின் வாலை ஒரு விநாடியும் அவ்விநாடியில் பத்திலொருபங்கு காலமும் ($1\frac{1}{10}$) முன்னதாய் அசைத்து தப்பிக்கொள்ள ஜாக்கிரதைப் படுத்தவேண்டும். பரிச உணர்ச்சியை மூளைக்குச் செலுத்துகின்ற நரம்புத்தொகுதிகளைப் பின்னப்படுத்தி அவைகளின் தொழில்களை நிறைவேற்றுவண்ணம் செய்தல் அசாத்தியமன்று, இத்தொகுதிகள் பின்னப்பட்டு பரிச உணர்ச்சியில்லா ஒருவனை நெருப்பிலிட்டுக் கொளுத்தினாலும் இன்னம் பலவித கடுமையான கொடுமைகளைப் புரிந்தாலும் அவன் கிஞ்சித்தும் உணரவேமாட்டான், இவ்வழல் அல்லதுகொடுமைகள் மரணம் விளைக்கின் மரணாவஸ்தையை எள்ளளவேனு முணரவே யுணரான். இவ்வித மரணமியாதெனில், அறிவிற்கும் ஞானத்திற்கும் சிறிதும் புலப்படாமல் திடீலென செயலற்று துஞ்சுகின்ற நிலையாம். இவ்வித மரணம் விளைவிக்க பல உபாயங்களிருக்கின்றன. இராமன் தன் கைத்துப்பாக்கியின் குண்டால் இலட்சுமணன் மூளையிலுருவிப் பாயும்படி சுட்டு மரணமுண்டாக்கின், இலட்சுமணன் இலேசமேனும் மரணாவஸ்தையை யுணரவே யுணரான், கைத்துப்பாக்கியின் குண்டானது மூளையிலுருவிப்பாய ஒரு விநாடியில் (1/1000) ஆயிரத்திலொருபங்கு காலந்தான் வேண்டியிருக்கிறது. ஆதலால் மேற்காட்டிய வேகத்துவநியாயத்தாலமரணமுண்ட இலட்சுமணன,மரணாவஸ்தையையறிவதற்கேனும்உணர்வதற்கேனும்சற்றுமிடமேயில்லை.

இது இப்படி நிற்க, (a flash of lightning) மின்னொளியின் வேகத்துவமோ, ஒரு விநாடியின் லட்சத்திலொருபங்கு காலத்திற்குள்ளாக (1/100,000) அண்டகடாகங்களெங்கும் அடர்ந்து படர்ந்திருக்கும் கார்மேகங்களை இருபிளவாய்ப் பிரித்துப் போடுகின்றது. மின்னொளியின் வேகத்துவ மிப்படியிருக்க, (Electricity) மின்சாரத்தின் வேகத்துவமோ, ஓர் கணப்போழ்துக்குள்ளாக சந்திரனுக்கும் இப்பூமிக்கு மிடையிலுள்ளவிடத்தில் நெருங்கியிருக்கும் மேகக்கூட்டங்களைப்பிரித்துப்போடும்.

மின்னொளியின் வேகத்துவமும் மின்சாரத்தின் வேகத்துவமும் கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுதக்குள்ளாக, அநேகஆயிரமயில் யாத்திரை செய்வதென மேற்காட்டிய நியாயத்தால் நன்கு புலப்படும். நாம் மின்னலைக் கண்ணுற் காண்கின்றனமே, எத்தருமத்தாலதைத் தரிசிக்கின்றோமெனக் கேள்வி யுதிக்கும். அதாவது—திடீலென ஒளிவிட்டு பறக்கும் எப்பொருளின் பிரகாசமும் நமது கண்களின் கீழ்ப் பாகங்களி லமைந்திருக்கும் ஒளி நரம்புகளில் (Retina) ஒரு விநாடியில் (1/6) ஆறில் ஒரு பங்குகாலம் வரைக்கும் (அப்பிரகாசம் மறைந்த அல்லது அழிந்துவிடினும்) படிந்திருப்பது போல் காணப்படுவது அந்நரம்புகளின் இயல்பாயும் தத்துவமாயுமிருக்கிறது. இவ்விலக்கணத்தைத் தேகதத்துவ சாஸ்திரிகளெல்லோரும் ஒத்துக்கொண்டிருகின்றார்கள். இவ்விலக்கணத்தின் தருமத்தால் தான் ஆகாயத்தில் அதிவேகமாய்ப் பறந்துபோகிற நெருப்புப்பொறிகள் அக்கணமே அணைந்துவிடினும் அவைகளினொளி நமது நேத்திரங்கட்குப்புலப்படுகிறது. இதுபோலவே மின்னொளி அதிவேகமாய்ப்பறந்து மறைந்துவிடினும் அதின் பிரகாசம் நமது கட்புலனுக்கு ஒரு விநாடியில் (1/6) ஆறிலொருபங்கு காலம் வரைக்குந்தோன்றும். மேலும் இப்பிரகாசம் எப்பொருளின் எப்பாகத்தில் படிகிறதோ அப்பொருளின் அப்பாகம் நிலையாய் நிற்காமல் அசைந்தாவது சுற்றிக்கொண்டாவது ஓடிக்கொண்டாவது உருண்டுகொண்டாவதிருக்கின் நிலையாய் நிற்பதுபோல்காணப்படும். ஒரு பீரங்கிவண்டியினின்றும் வெடிதீர்த்த பீரங்கிக் குண்டின் மேலாவது, ஓரிருட்டறையில் ஆட்டிவிட்ட பலவித வர்னங்கள் பூசிய பம்பரத்தின்மேலாவது, மின்னொளியாவது மின்சார ஒளியாவது படியும்படி செய்வித்து, வேகமாய் ஓடுகின்ற குண்டையும் சுற்றி ஆடுகிற பம்பரத்தையும் பார்த்தால் அசைவற்று நிலையாயிருப்பனபோற்காணப்படும். சுற்றிக்கொண்டிருக்கும் பம்பரத்தில் பூசியிருக்கும் பல வர்னங்களும் தெளிவாய் நமது கட்புலனுக்குப்புலப்படும். இதை நுட்பமாய்ப்பரீட்சைசெய்த (Dove) இடௌ என்பவர், மின்னொளி பறக்கும்போது பூமியின் மேற்புறத்தில் ஆடிக்கொண்டும், ஓடிக்கொண்டும், சுற்றிக்கொண்டும், உருண்டுகொண்டும், இருக்கின்ற எல்லாப்பொருள்களும் அசைவற்று நிலையாயிருப்பதுபோல் காணப்படுமெனப் பகர்ந்திருக்கின்றனர். போதுமான வேகத்துடன் செல்கின்ற கைத்துப்பாக்கியின் குண்டானது வருத்தமென்பதைச் சற்றேனுமுணர்த்தாமல் ஒருவன் மூளையிற்பாய்ந்து மரணம் விளைக்குமாயின், மின்னொளியாவது மின்சாரமாவது ஒருவனுக்கு மரணம் விளைக்கின் இம்மரணத்தால் விளையும் கொடுமை அல்லது அவஸ்தையினளவை அறிவுடையவர்கள்தான்அளவிடக்கடவர்.

இத்தத்துவத்தை யுணர்ந்துதான் ஐரோப்பா கண்டத்தில் நாகரீகமும், செல்வப்பொழிவும், கல்விப்பொழிவும் மலிந்த சிறந்த குடியரசாங்கமாகிய பிரான்சியதேசத்தார் கயிற்றில் மாட்டி தூக்கிடுவதற்குப் பதிலாகவும், இருப்புப்பெட்டியின் மேற்புறத்தில்படுக்கவைத்து தலைவேறு உடல்வேறு செய்விக்கும் கொலையந்திரத்திற்குப் பதிலாகவும,மின்சாரத்தால் கொலைபுரிவித்தல் மானுஷீகத்திற்குப் பொருந்தியதென அனுட்டிக்கப் பிரயத்தினஞ்செய்கின்றார்கள்.

(இன்னும்வரும்.)

C. L.

கள்ளஆஸ்திகம்.

இம்மகுடஞ்சூட்டிப்புதுவை தத்துவநேய ரொருவர்—புதுவைக் கடுத்த காரணப்பட்டு கிராமத்தில் நூதனமாய்ச் சமைக்கப்பட்ட ஒரு சைவமடத்தில் சென்ற ஆருத்திரா நட்சத்திரத்தன்று நடராஜபடத்திற்கு நடத்தப்பட்ட உற்சவகாலத்தில் வேண்டுகோளுக்கிணங்கிச்சென்ற கனம்பொருந்திய ஒரு முதலியாரவர்களைத் தொடர்ந்தேகிய சைவசிகாமணி யொருவர் நடேசனுக்குப் பூசைநடந்துகொண்டிருக்கையில் பசியாற் பீடிக்கப்பட்டவராய் மடப்பள்ளியிலிருந்த அம்மையாரை அன்னம் படைக்கச்சொல்லிகேட்க;ஸ்வாமிக்கு ஆராதனையும் அடியார்கள் அமுதருந்தலு முடியாமுன்னம் கூடாதென்று அந்தம்மாள் மறுக்க; அவர் (மானங்குலம் * * * பசிவந்திடப்பறந்துபோம்) என்னும் பாட்டையும் பின்னுஞ் சில நியாயங்களையுங்கூறி, பசியால் வருந்துகையில், கடவுளைத் துதிப்பதற்கும் மனம் ஒருவழிப்படாதென்று உபதேசித்து, தாமே மடப்பள்ளியிலிருந்த அன்னபானாதிகளைப் பரிமாறிக்கொண்டு புசித்தனராம்; சைவசமயசாஸ்திரங்களுக்கு விருத்தமாய்ச் சைவர் இப்படியுஞ் செய்வரோவென்று வியந்து எழுதியிருக்கிறார். [இதனாலே அச்சைவர் வெளிக்கு வைதிகத்தைக்காட்டினபோதிலும், உள்ளத்தில் சுத்த லவுகிகராயிருக்கிறதாகத் தெரியவருகிறது. இவ்வாறே அநேகர் தைரியக்குறைவினாலும், சுற்றத்தார் முதலானவர்களுடைய நிர்ப்பந்தத்தினாலும், கோவணங்கட்டாத ஊரில் கோவணங்கட்டினவனைப் பயித்தியக்கார னென்பார்களாதலால், தாம் வேறுபடாமல் பெரும்பாலாரோடு கலந்துகொண்டு நாளைக்கழிப்பது நன்மையெனக்கருதி, வெளிக்கு வைதிகாளைப்போல நடித்துக்கொண்டு, மனதில் லவுகிகாளுடைய கொள்கையை அனுசரித்துவருகிறார்கள்.]

—o—

சாதிசமயவாதவிபரீதம்.

ஐயா, பத்திராதிபரவர்களே,

சென்றநான்கு வாரபத்திரிகைகளில் இந்தவாதம் எழுதப்பட்டிருக்கிறது ! அதில், "நாடுசீர்மையற் றருளிமழுங்கிக் கிடக்குமோர் நிலைமையினைக்கெல்வி யெறியான்கருதி,மனு வருணபேதத்தை யாதியினிகழச் செய்தருளினர்" என்றும் "இச்சூடசியால் * * அவ்வவ்வருணத்தோர் தத்தந்தொழிலை யூக்கத்துடன் ** நடாத்திவந்தனர்" என்றும், ம-ா-ா-ஸ்ரீ-பாலசுந்தரமுதலியார் கூறியிருக்கினறனர். இதனாலே நாடுசீர்ப்படுவதற்கு மனுசெய்த உபாயமென்று தெரியவருகிறது. அப்படியாயின, பிரமனுடைய முகத்தில் பிராமணனும், மார்பில் க்ஷத்திரியனும், துடையில்வைசியனும், பாதத்தில் சூத்திரனும் பிறந்ததாகச் சொல்லியிருப்பதற்கு விரோதமாகிறது. அன்றியும், மற்றத்தேசங்களெல்லாம் சாதிபேதமின்றி அவரவர் தந்தம் திறத்துக் கேற்றதொழிலைச் செய்வதினால் விர்த்தியடைந்திருக்கின்றன. ஆதியில் இந்துதேசமிருந்த நிலைமையை அறிந்து மனுசெய்த ஏற்பாட்டை முதலியார் ஊகித்தெழுதியிருப்பார்.

"சாத்திரசோதனையில் நாட்டம் வைத்திருந்தவேதியர் தெய்வத்தன்மையை யடைந்தனர்" என்பதற்குச் சாட்சியாக "தெய்வாதீனம் ** பிராமணமதேவதா" எனனுஞ் சுலோகத்தைஉதகரித்தனர். இச்சுலோகஞ்செய்தவர் பிராமணரோ யாயின, அதுமேற் கோளாகமாட்டாது.

ஐயா, மதங்களனையவுமனிதரது ஏற்பாடுகளே, ஒருமுதலவரேற்பாடாகத் தோன்றவில்லையென்று தாங்கள்கூறியதை உண்மையென்றே ஒப்புக்கொள்ளுகிறார். அதனாலே அவருடையகூற்றினபடி மதத்தை அனுசரித்தகடவுளர்களும் வேதாகம

முதலியநூல்களும் அற்புதங்களும் கற்பனையேயாகின்றன; ஆயின சிலர் சர்வேஸ்வரனைப்போல வேதம் அநாதியென்றும், சிலர் பிர்மத்தின் ஸ்வாசமென்றும், சிலர் பிர்மாவின் வாக்கென்றும், சிலர் [illegible] வேமுதல்வனென்றும், இவ்வாறுபற்பலர் பற்பலவிதமாய்ச் சொல்லுவதற்குமாறுபடுகின்றன. அன்றியும், "கற்பிதமாய்த்தோன்றி நின்றழியு மியல்பினைவாய்ந்தவேனைய சமயங்கட்குமாறுகிய ஆன்மாககட் கோரேமவைப்பெனத் திகழும் இந்துமதத்தின் திறத்தைபெடுத்துப் புகல்வான் தொடங்கல்" மலைத்தேனைமுடவன் ஏறியுண்பேனென்று சொல்வதொக்குமென்று பாலசுந்தரமுதலியார் எழுதியிருக்கிறார். இதனாலே இந்துமதமாத்திரம் கற்பிதமன்றி கடவுளாலாய மதம்போலும். இந்துமதமென்பது என்னமதம்? அது இந்துக்களுக்குரிய பல மதங்களையுங்குறிக்குமே; அவற்றுள் ஒன்றையொன்று விரோதிப்பதால், எது உண்மையானது? அல்லது எல்லாம் உண்மையானவையா?

மதம் கற்பிதமாயினும் நன்மைபயக்கிறதென முதலியார் கூறியதற்கு, மதத்தினால் நேரிட்ட சில கொடுமைகளைத்தாங்களெடுத்துக்காட்டியவற்றுள் சைவர்கள் க்ஷமணர்களைக் கழுவேற்றியதின்பேரில் வாதந் திரும்பிவிட்டது. சைவர்கள் ஏற்றவில்லை, க்ஷமணர்கள் தாமேஏறினார்களென்பதற்கு, நீங்களேனவீணாயிறக்கின்றீர்கள், பரமசிவனுக்கு அடிமைபூண்டு உயிர்வாழ்ந்திருங்களென்று க்ஷமணருக்குச்சொல்லிய திருஞான சம்பந்தரைநோக்கி, "வேடசிறியாய் நீ யெவ்வாறெங்கட்கடாதமொழி, சொன்னதென்று மானமுளார் கழுவிலேறத்தொடங்கினர்." இவ்வண்ணமாக—"மதத்தினின் மானமிக்கார் தாங்களே வலியவேறிப்பதைத்திடவிருந்தார்," என்று திருவிளையாடற்புராணத்திலுள்ள வாக்கியங்களை மேற்படிமுதலியார் அத்தாட்சியாக எடுத்துக்காட்டிச் சாதித்து; மறுபடியும். "ஆயினும், ஏனைப்பறிதலை யவரைச்சைவ விதத்தினலொழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப் பற்றிச் சிதைத்திட்டிடர் செய்தேறிட்டார் திரிதலைக்கழுக்கோ றன்னில்," என்னும் வாக்கியத்தை எடுத்துக்கூறி சைவர்கள் வதைத்ததாகவும் ஒப்புக்கொண்டு, இதுமறக்கருணை என்கின்றார். ஐயா, அதனாலும். தாங்கள் அப்புராணத்திலிருந்தெடுத்தே உதகரித்த சிலபாடல்களாலும் சமணர்கள் குப்பைச்சாம்பலையும் கோமயத்தையும்வாரிப்பூசிக்கொண்டு, அதுவுங்கிட்டாதவர் கன்றைத்தோளில்போட்டுக்கொண்டும், கோமயத்தின் சேறிட்டவர்களுடைய நெற்றியோடு நெற்றியைத்தாக்கிக்கொண்டும், இவ்வண்ணமாகக்கொலையுண்ணுமல் உயிர்தப்பினரென்றும், மடிந்தவர்கள்யாவரும் கழுகு நாய் நரிகள் கவ்விக்கவ்விப் பிடுங்கித்தின்னக்கிடந்தனரென்றும், தெரியவருகிறது. இவ்விரண்டு பட்சத்தையும் யோசிக்குமிடத்து, 'மதத்தினின்மானமிக்கார்'என்றதனால் சம்பந்தரோடுவாதுபுரிந்த சமணமுனிவர்கள் தங்களைச்சைவ மதத்தில் சேரசசொன்ன சமயாசாரியனைநோக்கி, உன்சமயமும் ஓர்சமயமா? தந்திரத்தினால் எங்களைச் சயித்துவிட்டதினாலே எங்கள்சமயம் குறைந்துபோகாது என்றுசொல்லி மதவைராக்கியத்தினாலும் சவுரியத்தினாலும் தாங்களே கழுவேறினார்களென்றும், சாமான்னியமான சமணசனங்களைச்சைவர்கள்துரத்தித்துரத்திப்பிடித்துக் கொலைசெய்தார்களென்றும் விளங்குகிறது. கருணையினால் பிணங்களையாவது புதைத்துவிடச்செய்யாமல் விட்டுவைத்து, நாய் நரிகள் பிடுங்கித்தின்னப் பார்த்திருந்ததும் வஞ்சமனத்தின் கொடுமைகொடுமை. ஆரியமதஸ்தர்கள் கருணைகூர்ந்தவர்களாயிருப்பார்களாகில், யாவருக்கும் மதாபிமானமிருக்கவேண்டுமென்று சொல்லுகிற அவர்கள் சமணர்களுக்கு மதாபிமான முண்டாயிருந்ததுபற்றிச் சந்தோஷப்பட்டேயிருப்பார்கள்.

கொலைசெய்தது மறச்செய்கையேயல்லாமல் அதில்கருணை விளங்காமையால், மறக்கருணையாகாதென்றதற்கு, ஓராசிரியன் தன்வித்தியார்த்தியைத் தண்டித்தல் அவனது நன்மைக்காதலால் அது கருணையின் காரியமென்று பாலசுந்தரமுதலியார் உதாரணமெழுதியிருக்கிறார். இந்ததெண்டனையில். வித்தியார்த்தி உயிரிழக்காமல் ஜீவித்திருந்து பின்பு குணப்படுவதால் கருணைவிளங்குகிறது. கொலையுண்டவன் அத்தெண்டனையால் பிந்தியாதொரு நன்மையுமடைந்ததாகத் தெரியவராமையால் அதில்கருணைவிளங்கவில்லை. அப்படியிருக்க, முதலியார்வித்தியார்த்தி உதாரணத்தைக்காட்டி, உடனே, சம்பந்தரைவழிபட்டொழுகியுய்ந்தசைவர்கள் மகாபாபிகளாகிய சமணரைக்கழுவிலேற்றித்தெண்டித்தது இரக்கத்தின்பயன்தானென்று எழுதியிருக்கிறார்.

சமணர்கள் தாமேவலியக் கழுவேறினார்களென்று முதலியார் சாதித்ததனால், கழுவேறியபடலமென்றிராமல், கழுவேற்றியபடலமென்றிருக்கிறதே யென்கிற ஆட்சேபனைக்கு, கழுவேற்றியபடலமெனப் பிறவினையிலிருத்தலின். கிரந்தகர்த்தாவுடையசம்பந்தரால் சமணர்கள் கழுவேற்றப் பட்டனரென்று தலைமைநோக்கிக் கூறினரென்றார். இவரோ பாடல்களிலிருப்பதுமல்லாமல், மதாவேசங்கொண்டு சைவரைக்கொலைபுரிந்துவந்த மகாபாபிகளாகிய சமணரைச் சைவர்கள் சங்கரித்தார்களென்று எழுதிஒப்புக்கொள்ளுகிறார். இதனாலே, தலைவருடைய ஆக்கினையின்படி மற்றச்சைவர்கள் புரிந்தகொலைக்கு அத்தலைவரோ பொறுப்பாகிறார். அப்படியிருக்க, "இங்ஙனந்தலைவர்மீது சாட்டிச்சொல்லல் சரித்திரக்காரரது மரபாமாதலான், 'ஓரமணரொழியாமேகழுவிலேற்றி' என்னுமூதுரைக்கும், 'மதத்தின் மானமிக்கார் தாங்களே வலியவேறிப்பதைத்திடவிருந்தார்' என்னுந்திருவாக்கினுக்கு முரண்படுதலில்லை." என்று முதலியார் கூறியதை வாசிப்பவர்கள் தான்அறிந்துகொள்ளவேண்டும்.

ஐயா, பத்திராதிபரவர்களே, "இவ்வளவில விண்வாதத்தை ஒழித்துவிடல்மரியாதை." என்றுதாங்கள்எழுதியிருப்பதினால், அந்தவாதம் அதோடு ஒழிந்துபோயிருக்குமென்றே நினைக்கிறேன். இன்னுமிருக்குமாயின், ஏகதேசமாய் ஒருவர் மனம்போனபடி முன்னுக்குப்பின் முரணுகப்பேசும்வாதத்தைப் பிரசுரஞ்செய்வதைப்பார்க்கினும், பிரயோசனகரமான வேறேவிஷயங்களைப் பிரசுரிப்பீர்களென்று கோருகின்றனன்.

ஓர்மெம்பர்.

வர்த்தமானசங்கிரகம்.

நடக்கப்போகிற ஜூபிலி உற்சவ சம்பந்தமாகச் சிற்சிலருக்குப் பட்டங்கொடுக்கவேண்டி ஜாபிதா தயார்செய்து, ஸ்டேட்டு செக்ரிட்டேரியவர்களும் மகாராணியவர்களும் ஆலோசிக்கும்படியாக இப்போது அனுப்பப்பட்டிருக்கிறது. வெகுவாய் 1877ஹூ௵த்தில் செய்ததுபோலவே இப்போதும் தயார்செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதனாலே அது மிகவும் பெரிதாயிருக்குமென்றும் நினைப்பதாய் பயனீர் பத்திரிகை பேசுகின்றது. இந்தியாஜெயில்களிலிருந்தும் ஆந்தமன தீவிலுள்ள குற்றவாளிச் சாலைகளிலிருந்தும் பலகைதிகளை விடுதலைசெய்த முன்மாதிரி இத்தருணத்தில் அனுசரிக்கப்படும்போலும்.

இந்தியாவிலுள்ள குஷ்டரோகிகளுக்குக் குணமுண்டுபண்ணும்பொருட்டு சீர்மையில் எடிம்பரோ பட்டணத்தில் பத்துவருஷத்துக்கு முன் ஏற்பட்ட சங்கத்தின் காரியதரிசியாகிய பெய்லிதுரையவர்கள் அந்தச் சங்கத்தார்பட்சத்திலே இப்போது கல்கத்தாவில் வந்திருக்கிறார். வங்காள ராச்சிய முழுதுமுள்ள ஜனங்களுள் 54,000 குஷ்டரோகிகளிருப்பதும், கல்கத்தாபட்டணத்தில் மாத்திரம் 1,200 பேரிருப்பதும் எல்லோருக்குந் தெரியாதிருக்கலாமென்றும், அதிகமாகச் சேர்த்துக்கொள்ளச் சாலையிலே இடம்போதாமையால், 90 பேர்மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களென்றும், அவ்விடத்திய பத்திரிகை யொன்றினால் தெரியவருகிறது.

ஆக்ரா பெண்டுகளாசுபத்திரி கட்டுவதற்காகசென்றமீ 22உ லேடிலயாலம்மாஅவர்களால் அஸ்திவாரக்கல்போடப்பட்டது. ஐரோப்பியர்களும் சுதேசவாசிகளும் அநேகர் வந்திருந்தார்கள். பெண்டுகள் வைத்திய பாடசாலை வித்தியார்த்திகளும் வந்திருந்தார்கள். மூதுராசெத் அவர்கள் அந்தக் கட்டடத்தின் அவசரமான வேலைக்காக ஜூபிலி ஞாபகார்த்தமாய் ரூ. 500 விராளங்கொடுத்தனர். [உத்தமமான காரியம்.]

சென்னைகாலஸ்திதி ரிபோட்டு.

—o—

(சென்றமீ உகூஉ யோடு முடிகிறவாரத்துக்கு.)

கஞ்சம்.—நான்கு துக்குடிகளில் அம்மை உபாயம்; மூன்று துக்குடிகளில சுரமும் கால்நடைகளுக்கு நோயும்; விஷபேதி வெகுவாய்க் குறைந்திருக்கிறது.

விசாகபட்டணம்.—இரண்டுதுக்குடிகளிலே சென்றபெருமழையினால் பயிர்கொஞ்சம்சேதம்; நன்செய் புன்செய் அறுப்பு; பலன் நடுத்தரம்; நான்குதுக்குடிகளிலே அம்மை, நான்குதுக்குடிகளிலே விஷபேதி(குறைவுபடுகிறது,) மூன்றுதுக்குடிகளில் கால்நடைரோகம்.

கோதாவரி.—பயிர் சாதாரணமாய் நன்று; ஆறு-லாக்கின் கீழ்ப்புறத்துக்குமேலே -எ- அடி. சுரம்பரவல, சிலபாகங்களிலே விஷபேதியும் மாட்டுரோகமும் (குறைகின்றன.)

கிருஷ்ணு.—பயிர் சாதாரணமாய் நன்று. நெல்லறுப்பு, பலன்சராசரிக்குக் குறைவு; ஆறு-அணைக்கட்டுக்குமேலே உஉ-அடி; சிலபாகங்களிலே சுரம், இரண்டுதாலூகாக்களிலே விஷபேதி (குறைந்துவருகிறது.)

நெல்லூர்.—பயிர்சாதாரணமாயநன்று, நன்செய் புன்செய் அறுப்பு, பலன்பூர்த்தி, ஆறுதாலூக்காக்களிலசுரம், இரண்டு தாலூக்காக்களில் அம்மையும் விஷபேதியும், ஒருதாலூக்காவில் மாட்டுரோகம்.

கடப்பை.—பயிர்நன்று, நன்செய் புன்செய் அறுப்பு, பலன்சுமார். ஐந்துதாலூகாக்களில் சிலவிடங்களிலே சுரம், மூன்றுதாலூகாக்களில் மாட்டுரோகம்.

அனந்தபூர்.—பயிர்நன்று, சிலவிடங்களிலே பருத்தியும் சோளமும் சப்பட்டை, நன்செய் புன்செய் அறுப்பு, பலன்சராசரி, சிலபாகங்களிலே அம்மையும் மாட்டுரோகமும்.

பல்லாரி.—பயிர்சுமார், சிலபாகங்களிலே துவரை பூச்சடி. பருத்திச்கும் சோதுமிக்கும்பிணி, வெள்ளைச்சோளம சாவி. நன்செய் புன்செய் அறுப்பு, பலன் - நெல்லும் கரும்பும் சுமார், புன்செய்குறைவு. மூன்றுதாலூகாக்களில் சுரம், நான்குதாலூகாக்களில் மாட்டுரோகம்.

கர்னூல்.—பயிர்நன்று, வெள்ளைச்சோளம் அறுப்பு, பலன்சராசரிக்குசகுறைவு; ஆறுதாலூகாக்களில் சுரமும் மூன்றுதாலூகாக்களில் அம்மையும மாட்டுநோயும் அதிகரிக்கின்றன.

சென்னை.—சுரம் வியாபிக்கிறது.

செங்கற்பட்டு.—பயிர்சுமார், சிலவிடங்களிலே மழைக்குறைவினால்கம்மி, நெல்லும் வரகும் அறுப்பு, பலன் சராசரிக்குக்குறைவு. அம்மை உபாயம், நான்கு தாலூக்காக்களில் மாட்டுரோசம்.

சிற்றூர்.—பயிர்சாதாரணமாய் நன்று, சிலவிடங்களில் மழைக்குறைவினால் சாவி, நன்செய் புன்செய் அறுப்பு, பலன் சராசரிக்குத்தாழ்வு. சிலபாகங்களில் சுரமும் அம்மையும், ஒருதுக்குடியில் மாட்டுரோகம்.

கூடலூர்.—பயிர்சாதாரணமாய்நன்று, சிலபாகங்களில் மழைக்குறைவினால் நெற்பயிர்சாவி, இரண்டுதாலூகாக்களில் சிலவிடங்களிலேவேர்க்கடலைச்குப்பூச்சியரிப்பு, நன்செய் புன்செய் அறப்பு, பலன் மொத்தத்தில சராசரிக்குத்தாழ்வு. ஒருதாலூக்காவில் மாட்டுரோகம்.

தஞ்சாவூர்.—பயிர் சாதாரணமாய்நன்று, சிலவிடங்களின் மழைகுறைவு, நன்செய் புன்செய் அறுப்பு, பலன்சராசரி. இரண்டுதாலூக்காக்களில் மாட்டுரோகம்.

திரிச்சினுப்பள்ளி.—பயிர் தண்ணீர் போதாமையால் கெடுதி, நெல்லறுப்பு சராசரி, கம்புகுறைவு.

மதுரை.—பயிர் நான்குதாலூகாக்களில் சிலவிடங்களிலே தண்ணீர் குறைவினால் சாவி, அறுவடையான விடங்களிலே பலன்கம்மி.

திருநெல்வேலி.—மழைசுமார், மழைபோதாமையால் முழுதும்பயிர்சாவி, ஒருதாலூக்காவில் நெல்லும்பதர், நன்செய் புன்செய்அறுப்பு, பலன்சாதாரணமாய்கம்மி. ஒருதாலூக்காவில் அம்மை, மூன்றுதாலூகாக்களில் மாட்டுரோகம் குறைந்துவருகிறது.

கோயம்புத்தூர்.—மழைசராசரி, பயிர்சாதாரணமாய் நன்று, சிலவிடங்களிலே தண்ணீர்குறைவினால் சாவி, நன்செய்புன்செய் அறுப்பு, பலன்—நெல்லும் கேழ்வரகும் சாதாரணமாய்சராசரிக்கு அதிகம், மற்றவைகம்மி, ஒருதாலூகாவில் சுரம், இரண்டுதாலூகாக்களில் அம்மை.

நீலகிரி—மழைசராசரி, பயிர்சாதாரணமாய்நன்று, சிலவிடங்களில மழை குறைவினால் பீடு, அறுவடையானஇடங்களில் பலன்சராசரி, ஒருதுச்குடியில் சுரம், மூன்றுதுச்குடிகளில் அம்மை.

சேலம்.—பயிர்சாதாரணமாய்நன்று, இரண்டுதாலூகாக்களில் சிலவிடங்களிலே தண்ணீர்ப்பாய்ச்சலில்லாதவைதாறுமாறு, நன்செய் புனசெய் அறுப்பு, பலன்சராசரி, மூன்றுதாலூகாக்களில் சுரம், இரண்டுதாலூகாக்களில மாட்டுரோகம்.

தென்கன்னடம்.—இரண்டாம்போக நெல்லறுப்பு ஆரம்பம் பலன்சராசரி. மூன்றுதாலூகாக்களில் சுரம்உபாயம், இரண்டுதாலூகாக்களில் அம்மை, மூன்றுதாலூகாக்களில் மாட்டுரோகம்.

மலபார்.—இரண்டாம்போக நெல்லறுப்பு, பலன்சராசரி ஒருதாலூகாவில் சுரம், எட்டுதாலூகாக்களில் அம்மை உபாயம், இரண்டுதாலூகாக்களில் மாட்டுரோகம்.

திருவான்கூர்.—இரண்டாம்போக நெல்லறுப்பு நடந்துவருகிறது. சிலவிடங்களில் அம்மையும் சுரமும் வியாபகம்.

பெரும்பாலும்சுகம்.—நன்று.

அறிக்கை.

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டி.

சென்னை லௌகிகசங்கம்.

—o—

வேப்பேரி சில்வர்ஸ்ரோட்டிலே செக்கிட்டேரி யவர்கள் கிரகத்தில், நிகழும் பிபர்வரி 27உ ஆதிவாரங்காலை (8) மணித்து, சங்கத்தின் மேம்பர்கள் மகாசபைகூடலாதும்.

நமது மெம்பர்களும கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவிதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச

தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்ஷதர்களோடு போராடி வெற்றிபெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

கையொப்பநேயருக்கு.

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறுதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

—o—

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு	— ரூ	3—0—0
வெளி ,,	,,	— ரூ	1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்துபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷ	3-க்கு	0	10	0
ஷ	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடேகூட, இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்துக்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

பத்திரிகைக்கு எழுதும்கடிதமுதலியவிஷயங்களை மாத்திரம்

சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி 307 - வது நம்பர் வீட்டில்

பு· முனிசுவாமிநாயகருக்கும் ;

1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளையும், வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்

மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி

மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்

அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.